*கவனிக்க.-2020.09.04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2193 - 2020 සැප්තැම්බර් මස 11 වැනි සිකුරාදා - 2020.09.11

*2193 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 58 |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 61 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**- (i) அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம் 2020, ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் 2020,செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) நிதி (திருத்தம்) சட்டமூலம் 2020,செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iv) துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2020,செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(v) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம் 2020,செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, செத்தெம்பர் மாதம்18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*


*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பிசுக்கால் ஏல விற்பனை
## கம்பஹா மாவட்ட நீதிமன்றம்

கொழும்பு 10, டீ.பீ.ஜாயா மாவத்தை, இல. 479 எனும் இடத்தில் பதிவு அலுவலகத்தை மற்றும் தெல்கொட, புதிய கண்டி வீதியில் இல. 351F எனும் இடத்தில் கிளை அலுவலகத்தை நடாத்திச் செல்லும் ஹட்டன் நெஷனல் பாங்க் பீஎல்சீ

வழக்காளி

வழக்கு இல. :169/M.B
தன்மை: அடகு
வழக்கு நடைமுறை: சாதாரண
பெறுமதி: ரூபா 18 மில்லியன்
கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்
எஸ்கிஸி: இல.: 88/19

எதிர்

வெலிவேரிய, புதிய கண்டி வீதியில், இல. 301/4 எனும் இடத்தில் ஷைன் செல்யுலர்ஸ் சென்டர் எனும் பெயர் கொண்ட முகவரியில் மற்றும் வர்த்தக பெயரின் கீழ் தனிநபர் வியாபாரத்தைக் நடாத்திச் செல்லும் மாலுகே சஜீவ ரொஷான் டயஸ்

எதிராளி

மேற்குறிப்பிட்ட இலக்கம் கொண்ட வழக்கில் எனக்கு வழங்கப்பட்டுள்ள விற்பனை அதிகாரப் பத்திரத்திற்கு அமைய வழக்காளி வங்கிக்கு மேற்குறிப்பிட்ட எதிராளியினால் நடாத்தப்பட்டு வரும் ஷைன் செல்யுலர்ஸ் சென்டர் எனும் பெயரிலுள்ள வர்த்தக நிலையத்தினை நடாத்திச் செல்லும் மாலுகே சஜீவ ரொஷான் டயஸ் என்பவரினால் வழக்காளி வங்கிக்கு பொதுவான தீர்ப்புக் கட்டளைக்கு அமைய செலுத்த வேண்டுமென நியமிக்கப்பட்டுள்ள ரூபா 1,397,770.12 தொகை மற்றும் அதன் பொருட்டு 2012, யூலை மாதம 01 ஆந் திகதி தொடக்கம் தீர்ப்பு பிரகடனப்படுத்தப்பட்ட முழுத்தொகையை செலுத்தி முடிக்கும் வரை அதன் பொருட்டு வருடாந்தம் 18.5% வீதம் வட்டியும், ரூபா 146, 325.54 தொகை பொருட்டு 2012, யூலை மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் தீர்ப்புக் கட்டளைத் திகதி வரை மற்றும் அன்று தொடக்கம் தீர்ப்புக் கட்டளை முழுத் தொகையை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை அதன் பொருட்டு வருடாந்தம் 23.5% வீதம் வட்டியும், மற்றும் ரூபா 156, 639.02 தொகை மற்றும் அதன் பொருட்டு 2012, யூலை மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் தீர்ப்பு பிரகடனப்படுத்தப்பட்ட திகதி வரை மற்றும் அன்று தொடக்கம் தீர்ப்பிடப்பட்ட முழுத் தொகையை முழுமையாகச் செலுத்தி முடிக்கும் வரை அதன் பொருட்டு வருடாந்தம் 23.5% வட்டியும் செலுத்துவதற்கு தவறவிட்டுள்ள படியால் கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனங்கள்,

**2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு எதிராளியினுடைய ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பிசுக்கால் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும்.**

**கட்டணம் செலுத்தும் விதம்:** குறித்த ஏல விற்பனையில் உயர்ந்த பட்சத்தை அடைந்தவர் கொள்வனவாளராவதுடன் ஏலம் முடிவடைந்தவுடன் உத்தேச கொள்வனவாளர் விற்பனை விலையின் 25% தொகையும், நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் படி அரசாங்க கட்டணங்களும், விற்பனை தொகையிலிருந்து 25% ஆன ஏலதாரரின் தரகு பணமும், உள்ளூராட்சி சபை கட்டணங்கள், ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழுச் செலவுகளும் ஏலதாரருக்கு செலுத்த வேண்டும். மேலும் கொள்வனவாளரால் மிகுதி 75% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் அவ் வழக்குக்குப் பற்றாக குறித்த கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட வேண்டும்.

**ஆதனம் அமைந்துள்ள இடத்திற்குச் செல்லும் வழி:** தெல்கொட வீதியிலிருந்து நெகும்கமுவ வீதியில் சுமார் 300 மீற்றர் வரை முன்னோக்கிச் சென்று இடது பக்கம் அமைந்துள்ள பொரளு வீதியில் சுமார் 250 மீற்றர் முன்னோக்கி சென்று வலது பக்கத்தில் அமைந்துள்ள சுமார் 12 அடி அகலம் கொண்ட பாதையில் 30 மீற்றர் முன்னோக்கிச் செல்லும் போது இறுதியில் இடது புறமாக குறித்த இந்த ஆதனம் அமைந்துள்ளது.

### அட்டவணை

மேல் மாகாணத்தின், கம்பஹா மாவட்டத்தில், சியனே கோரளை, மெத பத்துவை, நெதுன்கமுவ எனும் இடத்தில் அமைந்துள்ள "மில்லகஹவத்த" என்று அழைக்கப்படும் "கலவத்த" எனும் காணியிலிருந்து பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 1 எனும் துண்டிற்கு உத்தியோகபூர்வ நில அளவையாளர் எல். ஜே. வியனகே என்பவர் மூலம் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 69518 மற்றும் 1999.08.09 ஆந் திகதி கொண்ட வரைபடத்திற்கு அமைய எல்லைகளாவன: வடகிழக்கிற்கு: தெவடென்த ; தென்கிழக்கிற்கு: லொட் 2 மற்றும் லொட் 6 (12 அடி அகலம் கொண்ட பாதை); வட மேற்கிற்கு: எச். எம். பொன் சேகாவிற்குரிய ஆதனம் ஆகிய எல்லைகள் கொண்ட 1றூட் (0ஏ.01றூ.0பே.) விசாலம் கொண்ட காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரம்செடி கொடிகள் மற்றும் ஏனைய அனைத்தும் உள்ளடங்களாகும். இந்த காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் ஈ571/258 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பதிவாளர்/பிரதி பிசுக்கால்.
மாவட்ட நீதிமன்றம்,
கம்பஹா.

2020, ஓகத்து 24.

9- 289

# நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல்

## அறிவித்தல்

### 107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்

குருநாகல் மேல் நீதிமன்ற வலயத்தினுள் சிங்கள மொழியில் நொத்தாரிசுக் கடமையில் கடமையாற்றிய திருமதி ஜயமான்ன மொஹொட்டி தென்னகோன் முதியன்சேலாகே புஷ்பலதா உமயங்கனி தென்னகோன் அவர்களின் 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் கடமையின் இராஜினாமா கௌரவ பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

ஜே.ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக , உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

“நிலமெதுர”
எல்விடிகல மாவத்தை,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 5.

கொழும்பு ,
2020, ஆடி 26.

9- 346

---

## அறிவித்தல்

### 107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்

கண்டி மேல் நீதிமன்ற வலயத்தினுள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் நொத்தாரிசுக் கடமையில் கடமையாற்றிய திரு. வலிமுணி ஆரச்சிகே விமலரத்ன அவர்களின் 2020.03.01ஆந் திகதி தொடக்கம் கடமையின் இராஜினாமா கௌரவ பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

ஜே.ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக , உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

‘நிலமெதுர”
எல்விடிகல மாவத்தை,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 5.

கொழும்பு ,
2020, ஆடி 08.

9- 347

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.